29th August 1970]

புலவர் ஓ. அறிவுடை நம்பி : வாலாஜாபேட்டை நகராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொரு ஆண்டும் மூன்று மாதங்கள் காலம் கடந்து தான் சம்பளம் ஆசிரியர்களுக்குத் தரப்படுகிறது. அந்தப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள ஏதேனும் திட்டம் இருக்கிறதா ? காலம் தாழ்த்தாமல் சம்பளம் கொடுக்க இனி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும்கூட, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நகராட்சி மன்றத்தில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சி மன்றங்களில் உள்ள நிதிப் பற்றாக்குறையினால் நடத்த முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் இந்த நகராட்சியும் ஒன்று. அவர்கள் கட்டவேண்டிய பணத்தையே கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசினரே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விண்ணப்பத்தையும் நகராட்சி மன்றத்தார் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசினரால் இப்போது 75 சதவிகிதம் கொடுக்கப்படுகிற மானியத் தொகையை உயர்த்தலாமா, இப்படிப்பட்ட நகராட்சிகளின் உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ளலாமா என்று யோசிக்கப்பட்டு வருகிறது.

Government Technical Examinations

*47. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that qualified instructors working in institutes of commerce recognised by Government were all along being appointed as Assistant Examiners in commercial subjects in respect of Government Technical Examinations ;

(*b*) whether such a procedure is still in force ; and

(*c*) if not, the reasons therefor ?

அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசினால் ஏற்பளிக்கப்பட்ட வணிகவியல் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகளில் வணிகப் பாடங்கள் குறித்து உதவித் தேர்வாளர்களாக நியமிக்கப்படுகின்றனரா ?

(இ) அத்தகைய நடைமுறை இன்றும் செயலில் உள்ளதா ?

(உ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) கேள்விக்கு இடமில்லை.